கலைஞர் 100
1924 2023

துணை ஆணையர்
(மாநில வரி) அலுவலகம்,
24 JAN 2024
– 1.

**சுருக்கம்**

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – வணிகவரித்துறை – ஈரோடு வணிகவரி கோட்டம், உதவி ஆணையர் (மா.வ), திண்டல் சரகம், ஈரோடு – 1 அலுவலகம் – திரு. பா.ஸ்ரீராம்குமார் பாண்டியன் என்பவர் கருணையடிப்படையில் 18.11.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை**

**அரசாணை (ப) எண்.367**

**நாள்: 24.11.2023**
**சோபகிருது , கார்த்திகை–8,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2054**

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. சேலம் கோட்ட இணை ஆணையரின் (மா.வ), செயல்முறைகள் ஆணை ந.க. எண்.10322/2022/அ3, நாள் 16.11.2022.
3. வணிகவரி ஆணையரின் கடித எண்.ஒய்–3/4084020/2023, நாள் 31.03.2023.

*****

ஆணை:

வணிகவரித் துறையில் ஈரோடு வணிகவரி கோட்டத்திற்குட்பட்ட உதவி ஆணையர் (மா.வ) (புலனாய்வு), ஈரோடு அலுவலகத்தில் துணை மாநிலவரி அலுவலராக பணிபுரிந்தபோது 11.05.2022 அன்று மறைந்த திருமதி. பா.மோகனசுந்தரி என்பவரின் மகன் திரு. பா.ஸ்ரீராம்குமார் பாண்டியன் என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 05.07.2022 அன்று விண்ணப்பித்துள்ளார் என்றும், விண்ணப்பம் அரசு ஊழியர் இறந்த நாளிலிருந்து மூன்றாண்டுகளுக்குள் பெறப்பட்டுள்ளது என்றும், கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து சான்றுகள்/ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில், மறைந்த அரசு ஊழியரின் மகன் திரு. பா.ஸ்ரீராம்குமார் பாண்டியன் என்பவர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார் என்பதால் இளநிலை உதவியாளர் பதவிக்கு தகுதியானவர் ஆகிறார் எனவும், இதன் காரணமாக மனுதாரரின் கோரிக்கை நடைமுறையிலுள்ள அரசாணைகளின்படி பரிசீலனை செய்யப்பட்டு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட இணை ஆணையர் (மா.வ), ஈரோடு கோட்டம் அவர்களின் செயல்முறைகளின்படி திரு. பா.ஸ்ரீராம்குமார் பாண்டியன் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளதாவும், இதன் தொடர்ச்சியாக, தனியர் 18.11.2022 முற்பகல் முதல் ஈரோடு வணிகவரி கோட்டம், உதவி ஆணையர் (மா.வ), திண்டல் சரகம், ஈரோடு–1 அலுவலகத்தில்

இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், தனியர் பணியில் சேர்ந்த நாளான 18.11.2022 முற்பகல் முதல் தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் பணித்தரத்தில், வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் வணிகவரி ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

2. வணிகவரி ஆணையரின் கருத்துருவை அரசு கவனமுடன் ஆய்வு செய்து வணிகவரித் துறையில், ஈரோடு வணிகவரி கோட்டத்திற்குட்பட்ட உதவி ஆணையர் (மா.வ) (புலனாய்வு), ஈரோடு அலுவலகத்தில் துணை மாநிலவரி அலுவலராக பணிபுரிந்தபோது 11.05.2022 அன்று மறைந்த திருமதி. பா.மோகனசுந்தரி என்பவரின் மகன் திரு. பா.ஸ்ரீராம்குமார் பாண்டியன் என்பவருக்கு, தமிழ்நாடு அமைச்சுப் பணி, வணிகவரித் துறையில், ஈரோடு வணிகவரி கோட்டம், உதவி ஆணையர் (மா.வ), திண்டல் சரகம், ஈரோடு–1 அலுவலகத்தில் கருணை அடிப்படையில் வழங்கப்பட்ட இளநிலை உதவியாளர் பணியை தனியர் பணியில் சேர்ந்த நாளான 18.11.2022 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு பணி வரன்முறைப் படுத்தப்படுவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா.ஜோதி நிர்மலாசாமி
அரசு செயலாளர்

பெறுநர்:
திரு. பா.ஸ்ரீராம்குமார் பாண்டியன், இளநிலை உதவியாளர்,
ஈரோடு வணிகவரி கோட்டம்,
உதவி ஆணையர் (மா.வ), திண்டல் சரகம்,
ஈரோடு–1 அலுவலகம்.
(வணிகவரி ஆணையர், சென்னை–5 வழியாக)
இணை ஆணையர் (மா.வ), ஈரோடு வணிகவரி கோட்டம்.
(வணிகவரி ஆணையர், சென்னை–5 வழியாக)
வணிகவரி ஆணையர், சென்னை–5. (இணைப்புடன்)
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்.
(வணிகவரி ஆணையர், சென்னை–5 வழியாக)

நகல்:
அரசு செயலாளரின் தனிச் செயலர்,
வணிகவரி மற்றும் பதிவுத் துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

24/11/2022

பிரிவு அலுவலர்

24/11/23